**வெலிகம நகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து வெலிகம நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டிறுதியில் உள்ளவாறு சேதனப் பசளை மத்திய நிலையத்தில் ரூபா 44,400 தொகைக்கான உயிரியல் இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 119,090 தொகைக்கான 06 உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) கடந்த வருடம் தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,294,650 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தை விட ரூபா 238,248 தொகை குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 18,077,726 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 34,045,803 தொகையான வருமானக் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 5,451,680 இற்கான 06 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 16,551,332 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,308,711 தொகைக்கான 28 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(இ) நிதிக்கூற்றுக்களின் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 823,304 தொகைக்கான 03 முற்பணக் கணக்கு மீதிகள், ரூபா 862,885 இற்கான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த வாடகை மீதியொன்று, ரூபா 764,529 இற்கான வாடி வீடு வாடகை மற்றும் ரூபா 336,459 இற்கான அனுமதிப்பத்திர மீதி ஆகிய மொத்தம் ரூபா 2,787,177 தொகையான 06 மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 5,867,895 தொகைக்கான பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 120,594,792 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட மற்றும் முறைசார் விதமாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பொருட்பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 20,271,539 தொகைக்கான இருப்புக்கள் தொடர்பான இருப்புப் பதிவேடு மற்றும் அட்டவணைகளுக்கும், கூட்டுத்தொகை ரூபா 837,804 இற்கான முற்பணங்கள் மற்றும் ரூபா 2,272,181 தொகைக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் கடன் கணக்கு தொடர்பான முறையாக மற்றும் நாளது வரை பேணப்பட்ட பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே விவரிக்கப்பட்டுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 164(2) ஆம் பிரிவு | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 08 ஹோட்டல்களின் முறையான கணக்கு அறிக்கைகளின் மீது வருடாந்த வருமானத்தில் 1 சதவீத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 | 02 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 2,183,348 தொகைக்கான செலுத்த வேண்டிய வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைச்சேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமாக இருந்த கூட்டுத்தொகை ரூபா 1,072,000 தொகைக்கான கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 24,434,609 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 159,912 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 24,274,697 இற்கான வளர்ச்சியொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியாக நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 80 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவு காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மூன்று ஆண்டுகளிலும் கணிசமான உயர்ந்த பெறுமதியில் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்ததுடன் சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவுகளை

அணவல் செய்வதற்கு எந்த விதத்திலும் ஆற்றல் ஒன்று கிடைக்காத நிலைமை ஒன்றினை காட்டியது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 5,451,680 இற்கான மீதிகள் காணப்பட்டமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத் தன்மை நிலைமையொன்று காணப்படுவதில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வீத வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 5,426,648 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 6,244,949 தொகையான சிட்டையிடலுடன் ரூபா 11,671,597 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 6,211,761 தொகையாக இருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 5,459,836 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**2.4.2 வாடகை வருமானம்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 3,845,987 தொகையாகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 7,840,345 தொகையுடன் ரூபா 11,686,332 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 7,564,799 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 4,121,533 தொகை அளவான உயர்ந்த பெறுமதியினை பெற்றிருந்தது.

**2.4.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 336,459 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 2,391,421 தொகையாகும். ஆண்டிற்கான சிட்டையிடல் முழுவதும் அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை மீதியில் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 22,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 22,062,852 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒப்பீட்டு மொத்த மதிப்பீட்டு மூலதனச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 63,318,399 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் கிரயம் ரூபா 8,334,652 தொகையாகக் காணப்பட்டது. 03 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மூலதன வேலைகளில் நிகழ்ச்சித் திட்டம் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்ட 02 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக அல்லது இரண்டாம் மற்றும் ஆரம்ப பதவிகளில் காணப்பட்ட 47 மிகைப் பதவியணியினை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேதன மற்றும் ரன்பொஹொனிய விற்பனை நிலையத்தின் மொத்த வருமானம் ரூபா 10,832,268 தொகையாகக் காணப்பட்டதுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 13,215,951 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானத்தை மிகைத்த ரூபா 2,383,683 இற்கான செலவுகள் அவதானிக்கப்பட்டதுடன், அப் பெறுமதி மொத்த வருமானத்தில் 22 சதவீத அளவில் இருந்தது.

(ஆ) சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் மீது ரூபா 2,821,345 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டு 2014 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பசுமை ஆச்சிரமத்திற்கு சொந்தமான 3 கட்டிடங்கள், நீர்த் தொட்டி மற்றும் தரை 2017 ஜூன் மாதம் அளவிலும் பொது மக்களுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட காணி மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு நங்கூரத் துறை ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்காக கேட்டிருப்பதால் பசுமை ஆச்சிரமத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் பயனற்ற செலவொன்றாக மாறியிருந்தது.

**3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாளாந்தம் திண்மக் கழிவுப்பொருட்கள் சுமார் 18 தொன்கள் சேகரிக்கப்படுவதுடன், 2016 ஆண்டின் போது ஊழியர் சம்பளம், எரிபொருள்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பேணுதலுக்காக ரூபா 33,909,647 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆண்டின் போது எதிர்பார்த்த சேதனப் பசளை உற்பத்தி 1,296,000 கிலோகிராம் எனினும், 197,370 தொகை கிலோ கிராம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது எதிர்ப்பார்த உற்பத்தியில் 15 சதவீதப் பெறுமதியினைக் கொண்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 8 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 58,541,944 தொகைக்கான சேமிப்பும் 6 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 39,752,789 தொகையும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரையும் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களைச் செயற்படுத்துதல்**

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு